# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2012



**தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சு**

**408 காலிவீதி.**

**கொழும்பு - 03.**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அ) அறிமுகவுரை | 01 |
| நோக்கும் பணியும் | 02 |
| விடயங்கள் மற்றும் செயற்பாடுகளின் ஒதுக்கீடு | 03 |
| ஆ) கீழ்வரும் வகுதிகளின் ஏற்பாடுகளுக்கு எதிரான மெய்ச் செலவினம் | 04 |
| i. தனி ஆள் வேதனாதிகள் மற்றும் அமைச்சின் ஏனைய நடைமுறைச் செலவுகள் | 04 |
| ii. நிறுவனங்களின் மொத்த நடைமுறைச் செலவினம் | 05 |
| iii. பகிர்வு ஒதுக்கீடு கணக்கு தொடர்பில் மூலதனத்தின் ஒவ்வொரு குறிமுறை | 06-08 |
| இ) காசு முற்பண கணக்குகளில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு பதிலாக மெய்யா வரையறை | 09 |
| ஈ) 2012 ஆம் ஆண்டின் வருடாந்த வேலைத்திட்டத்திற்கு எதிரான உற்பத்தி விளைவளவு மற்றும்/அல்லது விநியோகிக்கப்பட்ட சேவைகள் பற்றிய தகவல்கள் | 10-18 |
| உ) செயலாற்றுகை தொடர்பில் கணக்கியல் அலுவலர்/பிரதான கணக்கியல் அலுவரின் அவதானிப்புரைகள் | 19-21 |

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2012

## தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சு

### அறிமுகவுரை

அமைச்சுக்கு இரு பிரதான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.அவையாவன தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி ஆகும். நாட்டில் விரைவான பொருளியல் அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு, தொழில் நுட்பவியலின் துறையின் பங்களிப்பு இன்றியமையாததாகும். விஞ்ஞான ஆராய்ச்சியின் இடையீட்டின் ஊடாக, நாட்டின் கைத் தொழிற்துறை மற்றும் சேவைகளின், தரம் மற்றும் உற்பத்தி திறனில் குறிப்பிடடு சொல்லத்தக்க தொரு உயர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் மக்களின் நலனோம்பல் நிலையும் மேம்படுத்தப்படல்.

தொழில்நுட்பவில் ஆராய்ச்சி அமைச்சின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்களாவன கீழ் குறிப்பிடப்படடுள்ள முக்கியமான பரப்பெல்லைகள் உள்ளடக்கும்

- கொள்கை முறைவடிவமாக்கம்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட் மாற்றீடு, வர்த்தமயப்படுத்தல்
- விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை
- மனிதவள அபிவிருத்தி மற்றும்
- சிறந்த ஆளுமை

செயலாற்றுகை அறிக்கையானது 2012 ஜனவரி மாதத்திலிருந்து டிசம்பர் வரைக்குமுள்ள நடப்பு மற்றும் மூலதன செலவினங்களின் வளர்ச்சியினையும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினையும் உள்ளடக்கும். இந்த அறிக்கையானது 2012/02/24 ஆம் திகதியிடப்பட்டதும் 01/2004 எனும் இலக்கத்தையுடையதுமான திறைசேரி கற்றரிக்கையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரிவு 3.2 இல் தரப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவுற தயாரிக்கப்பட்டுள்ளது

## நோக்கு

2020 ஆம் வருடத்திற்குள் பிராந்தியத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட ஒரு நாடாகுவதற்கு இலங்கை தகுதியுடையதாயிருக்கும்.

## பணி

இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு இன்றியமையாத உயர்தரம், உற்பத்தி மற்றும் விரிவான செயற்பாடுகளை நிச்சயம் செய்துகொள்வதற்கு விஞ்ஞான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தொழில் நுட்ப மாற்றீடுகள் உள்ளடங்கலாக விஞ்ஞான மற்றும் தொழிற்பாட்டினை மேம்படுத்தலுடன் தொடர்புடைய கொள்கைளை முறைவடிவாக்கம் செய்தலும் அமுல்படுத்தலும்.

## விடயங்கள் மற்றும் செயற்பாடுகளின் ஒதுக்கீடு

அதிமேதகு ஜனாதிபதியினால் உறுப்புரை 44 (1) இல் தரப்பட்டதும் 2011 டிசம்பர் 14ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1736/23 எனும் இலக்கத்தை கொண்டதுமான அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான விடயங்கள் மற்றும் செயற்பாடுகளின் ஒதுக்கீடுகளின் நிபந்தனைகளின் படி தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளையும் நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றார்:

- எதிர்காலத்திற்கான மஹிந்த சிந்தனையை அடிப்படையாக கொண்டு அமைச்சிற்கு உரித்தளிப்பு செய்யப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிதிச்சட்ட நிறுவனங்களின் அகப்பாட்டெல்லைக்குள் அடங்கும் சகல விடயங்களும் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் அத்துடன் அரசினால் சேர்த்துக்கொள்ளப்படும் சகலவற்றையும் உள்ளடக்கியதான தேசிய கொள்கை என்பவை தொடர்பில் கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்ளை முறைவடிவமாக்கம் செய்தல்.
- தேசிய திட்டமிடல் அதிகாரிகளின் ஒப்புதலுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட காலவரையறைக்குள் மற்றும் பாதீடு வள ஒதுக்கீட்டிற்குள் சம்பந்தப்பட்ட குறிக்கோள்களை சாதிப்பதற்கு அத்தகைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள்,கருத்திட்டங்களின் செயற்படுத்துகையினை வழிப்படுத்துதல்.
- வியாபாரம் வினைத்திறனுடன் நடப்பதை நிச்சயம் செய்துக் கொள்வதற்கு சகல முறைமைகள் மற்றும் செயன்முறைகளை மறுசீரமைத்தலும் மற்றும் ஊழல் மற்றும் விரயத்தை இல்லாதொழிக்கும் அதேவேளையில் ஏற்புடைய இடங்களில் நவீன முகாமைத்துவ தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்பவியலை அறிமுகப்படுத்தல்.
- அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் அடங்கக்கூடிய சகல அரச சேவைகளையும் வினைத்திறமையுடனும் மக்கள் நட்புடனும் வழங்கல்
- விஞ்ஞான மற்றும் கைத்தொழிற்துறை ஆராய்ச்சி
- நியமங்களை தாபித்தலும் கட்டுப்படுத்தலும்.
- சமூக பொருளாதார ஆராய்ச்சி
- ஆராய்ச்சி நிறுவனங்களினால் கோரப்படும் வசதியினை வழங்குவதன் மூலம் ஆராய்ச்சியினை திட்டமிடலும் நடத்துதலும்.
- அடிப்படை விஞ்ஞானத்தில் குறித்துரைக்கப்பட்ட பரப்பெல்லைகளில் ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதலும் அடிப்படை கற்கைகளினை மேம்படுத்தலும்
- அமைச்சிக்கு உரித்தளிக்கப்பட்ட நிறுவனங்களினை மேற்பார்வை செய்தல்.

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அகப்பாட்டுடெல்லைக்குள் அடங்கும் நிறுவனங்கள்;

1. நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர்.சி.கிளார்க் நிறுவகம்
2. கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவகம்
3. அடிப்படை கற்கைகள் நிறுவகம்
4. தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்
5. தேசிய ஆராய்ச்சி மன்றம்
6. தேசிய விஞ்ஞான மன்றம்
7. தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு
8. ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபை
9. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
10. வரை.இலங்கை நெநோ தொழில்நுட்ப (தனியார்) நிறுவகம்
11. இலங்கை கோள் மண்டலம்
12. இலங்கை கட்டளைகள் நிறுவகம்

**ஆ) கீழ்வரும் வகுதிகளின் ஏற்பாடுகளுக்கு எதிரான மெய்ச் செலவினம்;**

i. தனி ஆள் வேதனாதிகள் மற்றும் அமைச்சின் ஏனைய நடைமுறைச் செலவுகள்

**நடைமுறைச் செலவினம் – 2012**

**அமைச்சு : தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி**
**தலைப்பு இல : 133**

வகுதி : தனிஆள் வேதனாதிகள் மற்றும் ஏனைய நடைமுறை

| விவரணம் | ஒதுக்கீடு ரூபாய் | மொத்த செலவினம் ரூபாய் | மிகுதி ரூபாய் |
|---|---|---|---|
| | | | |
| **அமைச்சரின் அலுவலகம்** | | | |
| தனிஆள் வேதனாதிகள் | 22,250,000 | 18,384,449 | 3,865,551 |
| ஏனைய நடைமுறை | 33,576,000 | 29,059,096 | 4,516,904 |
| | | | |
| **உப கூட்டுத்தொகை** | **55,826,000** | **47,443,545** | **8,382,455** |
| | | | |
| **நிர்வாக மற்றும் தாபிப்பு சேவைகள்** | | | |
| தனிஆள் வேதனாதிகள் | 40,700,000 | 37,067,336 | 3,632,664 |
| ஏனைய நடைமுறை | 66,150,000 | 59,695653 | 6,454,347 |
| | | | |
| **உப கூட்டுத்தொகை** | **106,850,000** | **96,762,989** | **10,087,011** |
| | | | |
| **விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | |
| தனிஆள் வேதனாதிகள் | 229,255,000 | 223,993,434 | 5,261,566 |
| ஏனைய நடைமுறை | 53,970,000 | 49,104,899 | 4,865,101 |
| | | | |
| **உப கூட்டுத்தொகை** | **283,225,000** | **273,098,334** | **10,126,666** |
| | | | |
| **கூட்டுத்தொகை** | **445,901,000** | **417,304,868** | **28,596,132** |

**ஆ) கீழ்வரும் வகுதிகளின் ஏற்பாடுகளுக்கு எதிரான மெய்ச் செலவினம்;**

ii. நிறுவனங்களின் மொத்த நடைமுறை

## நடைமுறை செலவினம் – 2012

அமைச்சு : தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி
தலைப்பு இல : **133**
வகுதி : தனிஆள் வேதனாதிகள் மற்றும் ஏனைய நடைமுறை

| விவரணம் | ஒதுக்கீடு ரூபாய் | மொத்த செலவினம் ரூபாய் | மிகுதி ரூபாய் |
|---|---|---|---|
| **அரச நிறுவனங்கள்** | | | |
| நவீன தொழில் நுட்பவியலுக்கான ஆர்தர்.சி.கிளார்க் நிறுவனம் | 77,000,000 | 69,460,000 | 7,540,000 |
| அடிப்படை கற்கைகள் நிறுவகம் | 104,000,000 | 104,000,000 | 0 |
| கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவகம் | 173,270,000 | 169,000,000 | 4,270,000 |
| தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம். | 164,000,000 | 144,816,000 | 19,184,000 |
| தேசிய ஆராய்ச்சி மன்றம் | 10,300,000 | 9,189,900 | 1,110,100 |
| தேசிய விஞ்ஞான மன்றம் | 84,000,000 | 80,582,000 | 3,418,000 |
| தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு | 22,000,000 | 14,162,150 | 7,837,850 |
| இலங்கை அங்கீகாரச் சபை | 20,600,000 | 16,466,000 | 4,134,000 |
| இலங்கை கட்டளைகள் நிறுவனம் | 0,000,000 | 0,000,000 | 0,000,000 |
| இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு. | 24,000,000 | 20,992,000 | 3,008,000 |
| | | | |
| **உபதொகை** | **679,170,000** | **628,668,050** | **50,501,950** |
| | | | |
| **கோள்மண்டலம்** | | | |
| தனிஆள் வேதனாதிகள் | 5,000,000 | 4,204,786 | 795,214 |
| ஏனைய நடைமுறை | 9,533,000 | 7,587,545 | 1,945455 |
| | | | |
| **உப கூட்டுத் தொகை** | **14,533,000** | **11,792,331** | **2,740,669** |
| **மொத்தம்** | **693,703,000** | **640,460,381** | **53,242,619** |
| | | | |

**ஆ) கீழ்வரும் வகுதிகளின் ஏற்பாடுகளுக்கு எதிரான மெய்ச் செலவினம்;**

iii. பகிர்வு ஒதுக்கீடு கணக்கு தொடர்பில் மூலதனத்தின் ஒவ்வொரு குறிமுறை

## <u>மூலதன செலவினம் – 2012</u>

**அமைச்சு : தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி**

**தலைப்பு இல : 133**

**வகுதி : புனருத்தாரணம் மற்றும் கொள்வனவு**

| விவரணம் | ஒதுக்கீடு ரூபாய் | மொத்த செலவினம் ரூபாய் | மிகுதி ரூபாய் |
|---|---|---|---|
| | | | |
| **அமைச்சரின் அலுவலகம்** | | | |
| புனருத்தாபணம் | 8,577,000 | 2,841,494 | 5,735,506 |
| கொள்வனவு | 3,000,000 | 2,967,347 | 32,653 |
| ஏனையவை | | | |
| **உப கூட்டுத்தொகை** | **11,577,000** | **5,808,841** | **5,768,159** |
| | | | |
| **நிர்வாகம் மற்றும் தாபிப்பு சேவைகள்** | | | |
| புனருத்தாபணம் | 7, 466,000 | 1,921,036 | 5,544,964 |
| கொள்வனவு | 10,400,000 | 8,883,865 | 1,516,135 |
| மனிதவள விருத்தி | 800,000 | 587,440 | 212,560 |
| தேசத்திற்கு மகுடம் கண்காட்சி | 8, 900,000 | 6,831,532 | 2,068,468 |
| உப கூட்டுத்தொகை | **27,566,000** | **18,223,873** | **9,342,127** |
| **கூட்டுத்தொகை** | **39,143,000** | **24,032,714** | **15,110,286** |

**அமைச்சு : தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி**
**தலைப்பு இல : 133**
**வகுதி : புனருத்தாபணம் மற்றும் கொள்வனவு அத்துடன் ஏனைய மூலதன செலவினம்**

| விவரணம் | ஒதுக்கீடு ரூபாய் | மொத்த செலவினம் ரூபாய் | மிகுதி ரூபாய் |
|---|---|---|---|
| **விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | | | |
| 1.விதாதா நிகழ்ச்சித்திட்டம் | | | |
| புனருத்தாபணம் | 5,710,000 | 5,062,973 | 647,027 |
| கொள்வனவு | 52,300,000 | 40,246,601 | 12,053,399 |
| அறிவு மாற்றீடு நிகழ்ச்சித்திட்டம் | 22,000,000 | 19,672,855 | 2,327,145 |
| **உப கூட்டுத்தொகை** | **80,010,000** | **64,982,429** | **15,027,571** |
| | | | |
| **2.விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | | | |
| முதலீடுகள் | 15,200,000 | 5,561,715 | 9,638,285 |
| **உப கூட்டுத்தொகை** | **15,200,000** | **5,561,715** | **9,638,285** |
| | | | |
| **3. பல்நோக்கு காமா வீசுகதிர் கருத்திட்டம்** | | | |
| முதலீடுகள் | 128,000,000 | 126,187,782 | 1,812,218 |
| **உப கூட்டுத்தொகை** | **128,000,000** | **126,187,782** | **1,812,218** |
| | | | |
| **4. நெநோ தொழில் நுட்ப ஆரம்ப முயற்சி** | | | |
| முதலீடுகள் | 405,000,000 | 165,603,503 | 239,396,497 |
| **உப கூட்டுத்தொகை** | **405,000,000** | **165,603,503** | **239,396,497** |
| | | | |
| **5.கிழக்கில் உதயம்** | | | |
| முதலீடுகள் | 7,000,000 | 1,454,313 | 5,545,687 |
| **உப கூட்டுத்தொகை** | **7,000,000** | **1,454,313** | **5,545,687** |
| | | | |
| **6. புதிய கண்டுபி டிப்பாளர் நிதியம்** | | | |
| அபிவிருத்தி உதவியாளர்களீ | 4,000,000 | 0 | 4,000,000 |
| **உப கூட்டுத்தொகை** | **4,000,000** | **0** | **4,000,000** |
| | | | |
| **7. விஞ்ஞான தொழில்நுட்ப , தந்திரோபாய அமுலாக்கம்** | | | |
| முதலீடுகள் | 6,800,000 | 2,196,180 | 4,603,820 |
| **உப கூட்டுத்தொகை** | **6,800,000** | **2,196,180** | **4,603,820** |
| **கூட்டுத்தொகை** | **646,010,000** | **365,985,922** | **280,024,078** |
| | | | |

contd……..

**அமைச்சு : தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி**
**செலவின தலைப்பு இல : 133**
**வகுதி : புனருத்தாபணம் மற்றும் கொள்வனவு அத்துடன் ஏனைய மூலதன செலவினம்**

| விவரணம் | ஒதுக்கீடு ரூபாய் | மொத்த செலவினம் ரூபாய் | மிகுதி ரூபாய் |
|---|---|---|---|
| **வெளிநாட்டு உதவி நிகழ்ச்சித்திட்டம்** | | | |
| விவசாய உணவு கருத்திட்டம் | 100,000,000 | 100,000,000 | 0 |
| நெனோ தொழில்நுட்ப விருத்தி (தே.வி.ம) | 1,000,000 | 1,000,000 | 0 |
| **உப கூட்டுத்தொகை** | **101,000,000** | **101,000,000** | **0** |
| | | | |
| **அரச நிறுவனங்கள்** | | | |
| நவீன தொழில்நுட்ப வியலுக்கான ஆர்தர்.சி.கிளார்க் நிறுவகம். | 65,000,000 | 23,727,429 | 41,272,571 |
| அடிப்படை கற்கைகள் நிறுவகம் | 65,000,000 | 54,518,000 | 10,482,000 |
| கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் | 234,450,000 | 97,194,666 | 137,255,334 |
| தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம் | 90,000,000 | 30,289,000 | 59,711,000 |
| தேசிய ஆராய்ச்சி மன்றம் | 242,800,000 | 220,940,000 | 21,860,000 |
| தேசிய விஞ்ஞான மன்றம் | 311,000,000 | 152,382,718 | 158,617,282 |
| தேசிய விஞ்ஞான தொழில் நுட்ப ஆணைக்குழு | 4,051,486 | 4,051,485.50 | 0.50 |
| இலங்கை அங்கீகாரச்சபை | 7,200,000 | 1,118,950 | 6,081,050 |
| இலங்கை கட்டளைகள் நிறுவகம் | 2,000,000 | 1,370,000 | 630,000 |
| இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு | 20,000,000 | 0.00 | 20,000,000 |
| | 40,000,000 | 13,562,000 | 26,438,000 |
| **உப கூட்டுத் தொகை** | **1,081,501,486** | **599,154,248.50** | **482,347,238** |
| | | | |
| **கோள்மண்டலம்** | | | |
| புனருத்தாபணம் | 2,428,000 | 828,376 | 1,599,624 |
| கொள்வனவு | 3,500,000 | 1,989,230 | 1,510,770 |
| மனித வள அபிவிருத்தி | 50,000 | 15,000 | 35,000 |
| 4D டிஜிட்டல் பொருத்துகை | 90,300,000 | 31,721,248 | 58,578,752 |
| **உப கூட்டுத் தொகை** | **96,278,000** | **34,553,854** | **61,724,146** |
| **கூட்டுத் தொகை** | **1,177,779,486** | **633,708,102.50** | **544,071,384** |

இ) காசு முற்பண கணக்குகளில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு பதிலாக மெய்யான வரையறை

| அரசின் செயற்பாடுகளின் செலவினங்களின் ஆகக் கூடிய அளவு ரூபாய் | அரசின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக்குறைந்தளவு ரூபாய் | அரசின் செயற்பாடுகளின் பற்று மீதிகள் ஆகக்கூடிய அளவு ரூபாய் |
|---:|---:|---:|
| **25,000,000** | **9,000,000** | **75,000,000** |

**ஈ) 2012 ஆம் ஆண்டின் வருடாந்த வேலைத்திட்டத்திற்கு எதிரான உற்பத்தி விளைவளவு மற்றும்/அல்லது விநியோகிக்கப்பட்ட சேவைகள் பற்றிய தகவல்கள்**

| **(i)** விதாதா நிகழ்ச்சித்திட்டம் | | |
|---|---|---|
| **நடவடிக்கைகள்** | **இலக்கு** | **விளைவளவு** |
| (1) விதாதா வள நிலையங்களுக்கு புதிய கட்டிடங்களை நிர்மாணம் செய்தல | 11 கட்டிடங்களின் நிர்மாண வேலை பூரணப்படுத்தப்பட்டுள்ளது. | கலென்பிடுன்னுவெவா விதாதா வள நிலைய நிர்மாணம் பூரணப்படுத்தப்பட்டதுடன் கஹவத்த, வெலிகேபொல, நிவிதிகல, கிரிஎல்லே, ஓபநாயக்க, மாதம்பே மற்றும் முசாலி போன்ற இன்னும் ஏழு இடங்களில் விதாதா வளநிலைய நிர்மாணம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |
| (2) தொழில்நுட்ப மாற்றீடு நிகழ்ச்சித்திட்டங்களை மற்றும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை இலக்கு நன்மை பெறுபவர்களுக்காக நடாத்துதல் . | ஒரு நிலையத்திற்கு 24 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 24 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்களினால் ஒரு வருடத்திற்கு 6240 நிகழ்ச்சித்திட்டங்கள்) | (i) நவீன தொழில்நுட்ப வியலுக்கான ஆர்தர்.சி.கிளார்கினால் 9 பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டன<br>(ii) விதாதா வளநிலையங்களினால் 3259 தொழில் நுட்ப மாற்றீடு நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன. 3259 தொழில் நுட்ப மாற்றீடு நிகழ்ச்சித்திட்டங்களாவன 69651 பங்கு பெறுநர்களுக்காக நடாத்தப்பட்டதுடன்., இவை பின் அறுவடை தொழில்நுட்பம், அரிசி சார் உற்பத்திகள், பால் சார் உற்பத்திகள், கிதுல் சார் உற்பத்திகள்,குறைந்த செலவினத்தில் வீடுகளை நிர்மாணித்தல், முன் வார்ப்புருவாக்கம் செய்யப்பட்ட யன்னல் கதவுகளினை நிர்மாணம் செய்தல், செயல்முறைசார் இலத்திரனியல் பயிற்சி, கையடக்க தொலை பேசி திருத்துகை, கணணி வன் பொருள் கற்கை நெறி, சேதன பசளை உற்பத்தி, பழங்கள் மற்றும் மரக்கறிகளில் நீர் கூறகற்றல் ஆகிய விடயங்கள் தொடர்பில் நடாத்தப்பட்டன.<br>(iii) நெநோ தொழில்நுட்பம், மின்னலிலிருந்து பாதுகாப்பு, வினைமுயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், சுகாதாரம், போஷனை ஆகிய விடயங்கள் தொடர்பில் 96891 பங்கு பெறுநர்களுக்காக 2024 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. |
| (3) விதாதா மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள். | 100 சிறிய நடுத்தர வினைமுயலுனர்களை இனம் கண்டு தொழில்நுட்பவியல் உதவிகளை வழங்கல். | 7சிறிய நடுத்தர வினைமுயலுனர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், 29 பங்கு பெறுநர்களுக்கு சந்தைப்படுத்தல் திறமுறை பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அது போன்று பழங்களின் செயன்முறை பற்றி 7 பங்கு பெறுநர்களுக்கும் பால் சார் உற்பத்திகள் பற்றி 8 பங்குபெறுநர்களுக்கும் சோயா மீட் சுவையூட்டிகள் பற்றி 38 பங்கு பெறுநர்களுக்கும் காளான் உற்பத்திகள் பற்றி 1பங்கு பெறுநருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் சிறந்த உற்பத்திகளின் செயன்முறை(GMP) தொடர்பில் விழிப்புணரச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 102 பங்கு பெறுநர்களுக்காக முன்னெடுக்கப்பட்டன. இலத்திரனியல் மற்றும் தொலைக்காட்சி திருத்துகை தொடர்பிலான பயிற்சிப்பிட்டறையில் 191 பேர் பங்கு பற்றினர். |



**புதிய விதாதா கட்டிடம்**



**விதாதா வள நிலையத்தில் தொழில்நுட்ப மாற்றீடு பயிற்சசிப்பட்டறை**



**விதாதா வள நிலையத்தில் பயிற்சி நிகழ்ச் சித்திட்டங்கள்**



**விதாதா வினைமுயலுனர்கள்**



சிறந்த உற்பத்தி செயன்முறைகள் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டம்



கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தில் பயிலுனர்களை பயிற்றுவித்தல் நிகழ்ச்சித் திட்டம்





விதாதா உற்பத்திகள்





திவநெகும கண்காட்சியில் விதாதா சாவடி

| ii) விஞ்ஞான விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
|---|---|---|
| **நிகழ்ச்சித்திட்டம் / நடவடிக்கை** | **இலக்குகள்** | **விளைவளவு** |
| (1)இருபக்க கூட்டுறவு இணைஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் (இந்தியாவுடனான கூட்டுறவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்) | ● இணை ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப்பட்டறைகளுக்கான பிரேரணைகளை தெரிவு செய்தலும் அமுல் படுத்தலும்<br>● இந்தோ சிறீலங்கா உடன்படிக்கையில் கீழ் இருபக்க உடன் படிக்கையினை முன்னெடுத்து செல்வதற்கு நடவடிக்கைகளை செயற்படுத்துகை செய்தல். | இந்திய நாட்டின் விஞ்ஞான தொழில்நுட்ப திணைக்களத்தை சேர்ந்த விஞ்ஞானிகளாலும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் விஞ்ஞானிகளாலும் பரஸ்பர உடன்படிக்கையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கும் பயிற்சிப் பட்டறைகளுக்கும் அநுமதி வழங்கப்பட்டது இரு நாடுகளாலும் இணை ஆராய்ச்சி என்ற வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதல்முயற்சி இதுவே. |
| (2)விஞ்ஞான தொழில் நுட்ப பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்<br>(அ) கண்காட்சிகளில் பங்குபெறல் | மாவட்ட கண்காட்சி | திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கைத் தொழில் கண்காட்சிகளில் மற்றும் (கொழும்பு - அநுராதபுர மாவட்டங்கள்) பள்ளிக்கூட கண்காட்சிகளில் (ரோயல் மத்திய கல்லூரி - பொலநறுவை, ‘‘கித்து’’ தேவி பிரபா - கிறிஸ்து தேவா பலிகா வித்தியாலய - காலி, ” டேம் டெஸி” தம்மிஸ்ஸர தேசிய கல்லூரி நாத்தாண்டியா, ”எக்சோடா 2012” சிறீகுருச வித்தியாலய களுத்துறை, ”ஹம்பாந்தோட்டை நவோதயா வலிபடன்விலா வித்தியாலயா ஹம்பாந்தோட்டை) |
| b)<br>விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒரு ஆர்வத்தை பள்ளிக் கூட மாணவர்களிடையே விருத்தி செய்தல் | வடக்கு மற்று மத்திய மாகாணத்திலிருந்து வருகை செய்த ஆசிரியர் மற்றும் மாணவரின் வருகைக்கு துணைமையாக இருத்தல் (ஒரு குழுவில் 250பேர்) | இந்நிகழ்ச்சித் திட்டத்தில் 5823 பள்ளிக் கூட மாணவர்களும் ஆசியர்களும் 204 பள்ளிக் கூடங்களிலிருந்து பங்கு பற்றினர் அவர்கள் கைத்தொழில் கண்காட்சி நிறுவகம், தேசிய எந்திரவியல் ஆராயச்சி அபிவிருத்தி நிலையம், நவீன தொழில் நுட்பவியலுக்கான ஆர்தர்.சி. கிளார்க் நிலையம்,இலங்கை கோள் மண்டலம், தேசிய நூதனைசாலை ஆகியவற்றிக்கு விஜயம் செய்தனர். |
| (3) விஞ்ஞான பயிற்சி | விஞ்ஞான தொழில்நுட்பத்தில் 30 அலுவர்களை பயிற்று வித்தல் | பின் அறுவடை தொழில் நுட்பம், திரவசவர்க்காரம் fibre கண்ணாடி உற்பத்தி, செங்களிமண் உற்பத்தி, வினைமுயலுனர்களை விருத்தி செய்தல்,ஆகிய விடயங்கள் தொடர்பில் 364 விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர்களும் 151 கள கூட்டிணைப்பாளர்களும் உள்ளுர் நிறுவகங்களில் பயிற்றுவிக்கப்பட்டனர். |

| **(iii) பல் நோக்கு காமா வீசு கதிர் வீழல்வசதி.** | | |
|---|---|---|
| **நடவடிக்கை** | **இலக்கு** | **விளைவளவு** |
| (i) சிவில் நிர்மாணம்<br><br>(ii)வீசுகதிர் வீழல் இயந்திர விநியோகம் | பல் நோக்கு காமா வீசுகதிர் வீழல் நிர்மாணம் தொடர்பில் 60% மான சிவில் வேலை<br><br>வீசுகதிர் வீழல் இயந்திரத்தை உருவாக்கல் | சிவில் நிர்மாண பணிகள் செய்யப்பட்டு வருகின்றது.<br>● சிவில் வேலையில் வேலையில் 60% பூரணமாகியுள்ளது.<br>● கருத்திட்ட பகுதிக்குச் செல்வதற்கான பாதை நிர்மாணம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.<br>● வீசுகதிர் விழல் இயந்திரம் உருவாக்கப்பட்டு வருகின்றது. |




Pool EPயினை பெற்றுக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட கொங்கீரீட் அஸ்திவாரம்




சகல EP களும் நிறுவப்பட்டமையினை மேற்பார்வை செய்தல்.









2012 டிசம்பர் மாதம் அறிக்கை செய்தவாறு, காமா வீசுகதிர் வீழல் இயந்திரத்தின் சிவில் வேலை நிர்மாணமானது செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

| iv) தேசிய நெநோ தொழில் நுட்ப ஆராம்ப முயற்சி | | |
|---|---|---|
| **நடவடிக்கைகள்** | **இலக்கு** | **விளைவளவு** |
| நெநோ பூங்காவின் நிர்மாணம். (நெநோ விஞ்ஞான பூங்கா கட்டம் 1அ) | நெநோ விஞ்ஞானபூங்காவின் கட்டம் 1 இன் 40% மான வேலை பூரணப்படுத்தப்பட்டுள்ளது. | சிவில் நிர்மாணவேலை செய்யப்பட்டு வருகின்றது.<br>● நிர்மாண செயற்பாடுகளின் முன்னேற்றமானது பூங்கா அபிவிருத்தி செயற்குழுவின் ஊடாக மாதாந்த அடிப்படையில் கண்காணிக்கபபட்டு வருகின்றது. |






நெநோ விஞ்ஞான பூங்கா கட்டம் 1 அ வின் நிர்மான பணிகள்



| **(V)கிழக்கின் உதயம்** | | |
|---|---|---|
| **நடவடிக்கை** | **இலக்கு** | **விளைவளவு** |
| 1) தொழில் நுட்பமாற்றீடு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல் பங்குபெறுநர்களுக்காக தொழில் நுட்பமாற்றீடு மற்றும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.<br><br>2) விதாதா வள நிலையங்களுக்காக புதிய கட்டிடங்களை கட்டுதல். | ஒவ்வொரு நிலையத்திற்கும் 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் 2 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தல்<br><br>01 கட்டிடத்தின் பூரண நிர்மானம் | விதாதா வள நிலையங்களினால் 01 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 03 தொழில்நுட்ப மாற்றீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன<br><br>சாய்ந்த மருது விதாதா வளநிலையத்திற்கு புதய கட்டிடம் கட்டப்பட்டது. |

| **(vi)** விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க திறமுறை | | |
|---|---|---|
| **நடவடிக்கை** | **இலக்கு** | **விளைவளவு** |
| (i) "தொழில் நுட்பவியல் சந்தையிடம் | அமைச்சின் கீழ் அடங்கும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சி பொருட்களை காட்சிப் படுத்தவும், ஆராய்ச்சிகளை வர்த்தகமயப்படுத்துவதற்கும் மற்றும கைத்தொழிலாளருக்கும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையில் தொடர்பிணைப்பை ஏற்படுத்தவும் ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது | தொழில்நுட்பவியல் சந்தையிடம் 2012 கண்காட்சியானது திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்தியத்தில் டிசம்பர் 10,11 ஆம் திகதிகளில் இடம் பெற்றது. கண்காட்சியின் தொனிப்பொருள் ”ஆராய்ச்சி தொழில் நுட்பத்தின் ஊடாக நல்லிணக்கம் ” என்பதாகும் அமைச்சின் கீழ் அடங்கும் 10 நிறுவனங்களும் இந்த நிகழ்வில் பங்குபற்றின. இதைத்தவிர இலங்கை கோள்மண்டலத்தினால் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் இரவு வான் அவதானிப்பு கூடாரங்கள் நடாத்தப்பட்டன. |



தொழில் நுட்பவியல் சந்தையிடத்தில்
தொழில்நுட்ப பருவக் கூட்டத்தொடர்



இரவு வான் அவதானிப்பின் போது அனுப்பப்பட்ட நீர் ஏவுகணை



யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தொழில் நுட்ப
கூட்டத் தொடரில் பங்கு பெறுநர்கள்



இரவு அவதானிப்பு கூடாரங்கள

## உ) செயலாற்றுகை தொடர்பில் கணக்கியல் அலுவலர்/பிரதான கணக்கியல் அலுவரின் அவதானிப்புரைகள்

2012 ஆம் ஆண்டில் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட பிரதான நடவடிக்கைகள் / நிகழ்ச்சித்திட்டங்கள

1. விதாதா நிகழ்ச்சித்திட்டம்
2. தேசிய நெநோ தொழில் நுட்ப ஆராம்ப முயற்சி
3. பல் நோக்கு காமா வீசுகதிர் வீழலினை தாபித்தல்
4. விஞ்ஞான தொழில் நுட்ப புத்தாக்க திறமுறையின் செயற்படுத்துகை
5. கிழக்கின் உதயம்
6. விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

### 1. விதாதா நிகழ்ச்சித்திட்டம்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கானது தொழில்நுட்பங்களின் மேம்பாட்டிற்காக,சிறிய நடுத்தர வினைமுயலுனர்க்கு துணைமையாக இருத்தலும் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நிமித்தம் தொழில் நுட்ப மாற்றீட்டிற்கு உதவி செய்தலும் ஆகும்

.

- விதாதா வள நிலைய கட்டிட நிர்மாணங்கள் நடைபெற்று வருகின்றது. (கஹவத்த, ஒபநாயக,மாதம்பே,கிரிஎல்ல, நிவிதிகல, வெலிகேபொல,முசாலி)
- தொழில் நுட்பமாற்றீடு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் குறைவான செயலாற்றுகையே அறிக்கை செய்யப்பட்டுள்ளது. இதற்கு காரணம் சகல மாவட்டங்களிலும் இடம் பெற்ற விஞ்ஞான தொழில் நுட்ப அலுவலர்களின் வருடாந்த மாற்றல் ஆகும்.

## 2. தேசிய நெநோ தொழில்நுட்ப ஆரம்ப முயற்சி

கைத்தொழிற் துறையிலே நெநோ தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை மேம்படுத்துவதன் மூலம், அதிகளவு அந்நிய செலாவணியை உழைப்பதற்கு தேசிய நெநோ தொழில்நுட்ப புதுமுயற்சியானது நோக்கம் கொண்டுள்ளது. 2012ம் ஆண்டில் நெநோ விஞ்ஞான பூங்காவின் கட்டம் 1 (அ) விற்கு இலங்கை அரசின் நிதியம் ஒதுக்கப்பட்டடுள்ளது.

- நெநோ விஞ்ஞான பூங்காவின் கட்டம் 1(ஆ) வின் நிர்மாண வேலைகள் செய்யப்பட் வருகின்றது.
- நிர்மாண வேலைகளின் முன்னேற்றமானது பூங்கா அபிவிருத்தி செயற்குழுவினால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 3. பல்நோக்கு காமா வீசுகதிர் வீழுல் செயற்றிட்டம்

பல் நோக்கு காமா வீசுகதிர் வீழல் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கானது, நோய் நுண்ம நீக்க செயன் முறையின் ஊடாக மருத்துவ உற்பத்திகளினை மிக நீண்டகலம் பழமையாகாது வைத்திருப்பதற்கும் மற்றும் உணவினை நீண்டகாலம் கெடாமல் பதப்படுத்தி வைக்கவும் உதவுதல் ஆகும். இத்தகைய நோக்கினை நிறை வேற்றம் செய்யக்கூடிய ஒரு இயந்திர வசதியை இலங்கையில் தாபித்தலானது, எமது உள்ளூர் உற்பத்திகளுக்கு சிறந்த ஏற்றுமதி சந்தையை வழங்கும் அதேநேரத்தில் இறக்கும்தி தொடர்பில் எமது நாட்டினரால் செலவிடப்படும் அந்நிய செலாவணி அளவினையும் குறைக்கும்.

இந்த இயந்திர் வசதியை தாபித்தல் தொடர்பில் கட்டிட சிவில் நிர்மாண வேலைகளாவன எது வித சிக்கல்களும் இன்றி தொடர்ச்சியாக செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த வீசுகதிர் வீழல் வசதியானது அது தாபிக்கப்படலிற்கு தேவையான நியமங்களுடன் ஒத்திசைகின்றதா என்பதை நிச்சயம் செய்துக் கொள்வதற்கு இந்த வீசுகதிர் வீழல் இயந்திரத்தினதும் மற்றும் இவ்வசதி தொடர்பில் ஏனைய கருவிகளினதும் தரத்தினையும் அவை நிறுவப்படுதலினையும் மேற்பார்வை செய்வதற்கும். கண்காணிப்பதற்கும் இலங்கை உசாவுனர்களை கொண்டதொரு குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

## 4. விஞ்ஞா தொழில் நுட்ப புத்தாக்க திறமுறையின் அமுல் படுத்துகை.

ஆராய்ச்சியினை வர்த்தகமயப்படுத்துதலானது, விஞ்ஞான தொழில் நுட்ப புத்தாக்க திறமுறையின் ஒரு முக்கிய அம்சமாகும், ஆராய்ச்சியினை வர்த்தகமயப்படுத்துதல் தொடர்பில் ஒரு புது முயற்சியாகவும் மற்றும் அமைச்சின் ஆராய்ச்சி நிறுவனங்களிடையேயும் மற்றும் கைத்தொழிற் துறையாளர்களிடையேயும் தொடர்பிணைப்பை ஏற்படுத்தவும் 2012 டிசம்பர் மாதம் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் ஒரு கணகாட்சியும் கூட்டம் தொடரும் யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இதைத்தவிர இலங்கை கோள் மண்டலத்தினால் உள்ளூர் மாணவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்காகவும் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு இரவு வான் அவதானிப்பு கூடார் மொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

## 5. கிழக்கில் உதயம்

கருவாடு உற்பத்தி, பனை மரம் சார் உற்பத்திகள் மற்றும் அரிசி மாவிலான நொறுக்குத் தீனிகள் ஆகிய பரப்பெல்லைகளில் தொழில் நுட்ப மாற்றீடு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

குந்தளாய் மற்றும் சாய்ந்த மருது பிர தேசங்களில் புதிய விதாதா வள நிலைய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

## 6. விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### அ) இருபக்க கூட்டுறவு

தொழில் நுட்பவியல் ஆராச்சி அமைச்சானது 2011 ஆம் ஆண்டில் இந்திய அரசின் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி திணைக்களத்துடன் ஒரு கூட்டுறவு நிகழ்ச்சித்திட்டத்தில் கைச்சாத்திட்டது. இரு நாடுகளுக்கும் பெறுமானம் சேர்க்கும் வகையில் இணை கூட்டுழைப்பு ஆராய்ச்சி செயற்றிட்டங்களில் பணியாற்றுவதற்கு இருநாடுகளினையும் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கான ஒரு சட்டகத்தை கூட்டுறவு நிகழ்ச்சித்திட்டம் வழங்கியது .இந்த கூட்டுறவு நிகழ்ச்சித்திட்டத்தில் இனங்காணப்பட்ட ஆராய்ச்சி பரப்பெல்லைகளாவன, உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கடலியல் / நில விஞ்ஞானம், உயிர்தொழில்நுட்பம் / பாரம்பரிய மருத்துவம் உள்ளடங்களாக மருத்தகவியல் திரவியங்கள். ஆகும் இரு நாட்டு விஞ்ஞானிகளாலும் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளாவன தொழில் நுட்பவியல் ஆராயச்சி அமைச்சினதும் இந்திய அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப திணைக்களத்தினதும் பரஸ்பர உடன்படிக்கையினால் மதிப்பீடு

செய்யப்பட்டு நான்கு செயற்றிட்டங்களுக்கும் பயிற்சிப்பட்டறைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இரு நாடுகளினாலும் ஒரே செயற்றிட்டம் தொடர்பில் கூட்டிணை ஆராய்ச்சி ஏற்றுக் கொள்ளப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

## ஆ) விஞ்ஞான தொழில்நுட்ப பிரால்யப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்

**தேசிய மற்றும் மாவட்ட கண்காட்சி**

தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவனங்களால் பல விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அநுராதபுர மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. இந்த கண்காட்சி நடைபெறுகின்ற அதே வேலையில் இம் மாவட்டத்தின் நீரின் தரத்தை அறிவதற்கு நீர் மாதிரிகள் பரீசிலனை செய்யப்பட்டன. இதைவிட விஞ்ஞான தொழில் நுட்பத்தை பிரபல்யப்படுத்துவதற்கு விதாதா வள நிலையங்கள் பல விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தின விஞ்ஞான தொழில் நுட்பத்தை மேம்படுத்தும் நோக்குடன் அமைச்சும் அநேகமான நிகழ்ச்சித்திட்டங்களில் பிரந்திய மட்டத்தில் பங்குபற்றியது.

**விசேட பள்ளிக்கூடநிகழ்ச்சித்திட்டம்**

விஞ்ஞானத்தை மாணவர்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்குடன் இந்த நிகழ்ச்சித்திட்டமானது, கல்வி அமைச்சின் கூட்டிணைவுடன் முன்னெடுக்கப்படட்து. இந்த நிகழ்ச்சித்திட்டமானது, வசதி வாய்ப்புகளற்ற பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களை இலக்காக கொண்டது. இந்த அடிப்படையில் இதன் முதல் நிகழ்ச்சித்திட்டமானது வடமாகாணத்தை சேர்ந்த மாணவர்களுக்காக 2012/11/07 ஆம் திகதி தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கௌரவ அமைச்சினதும் மற்றும் கல்வி அமைச்சின் கௌரவ அமைச்சினதும் பங்களிப்புடன் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் யாழ்ப்பாண கல்வி வலயத்தை சேர்ந்த 250 மாணவவர்கள் கலந்துக் கொண்டனர். இம்மாணவர்களுக்கு நோயல் கல்லூாரியின் சாரணர்கள் கூடாரத்தீ (CAMP FIRE) வரவேற்பினை வழங்கினர். இந்நிகழ்ச்சித்திட்டத்தில் வட மத்திய மற்றும் சப்றகமுவ மாகாணத்தை சேர்நத 5823 மாணவர்கள் பங்குபற்றனர். இம்மாணவர்கள் கைத்தொழில் தொழில் நுட்பநிறுவகம், தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி ,அபிவிருத்தி நிலையம், நவீன தொழில் நுட்பவியலுக்காண ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம், வானிலைஆராய்ச்சி திணைக்களம், இலங்கை கோள் மண்டலம், தேசிய விலங்கியல் பூங்கா மற்றும் தேசிய நூதனசாலை, ஆகிய நிறுவனங்களுக்கு விஜயம் செய்து அந்நிறுவனங்களால் ஆற்றப்படுகின்ற பணி தொடர்பில் பல விபரங்களை அறிந்துக் கொண்டனர்

## இ) விஞ்ஞான பயிற்சி

அமைச்சு மற்றும் விதாதா வள நிலையங்களினைச் சேர்ந்த 515 அலுவலர்களுக்காக அவர்களின் மனித வள செயற்றிறனை விரிவுபடுத்தும் நோக்குடன் உள்ளூர் நிறுவனங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.